நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026–ம் வருடம் ஜீன் திங்கள் 16–ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.785/2026
IN
குற்ற எண்.168/2026

எட்வின்,
த/பெ.செல்வின் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம். ... புகார்தாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கண்ணபெருமாள் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**உத்தரவு**

1. **மனுவின் சுருக்கம்** –

மனுதாரர் வழக்கின் அபிடவிட்தாரார்/மனுதாரர்/வாகனஉரிமையாளர்/எதிரி ஆவேன் என்றும், தான் கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட TN 69 BR 1872 என்ற பதிவெண் கொண்ட YAMAHA MT15 இருசக்கர வாகனத்தின் தற்போதைய உரிமையாளர் என்றும், மேற்படி வாகனத்தை குற்ற செயலில் ஈடுபடுத்தியதாக கூறி தனது வாகனத்தை தன்னிடமிருந்து கைப்பற்றி குற்ற எண்.168/2026 பிரிவுகள் 29(1), 8(C), 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழ் வழக்குப் பதிவு செய்து மேற்படி வாகனத்தை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து வாதி போலிசார் காவல் நிலையத்தில் திறந்த வெளியில் நிறுத்தி வைத்துள்ளனர் என்றும், மேற்படி வழக்கிற்கும் தனது இருசக்கர வாகனத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி குற்ற வழக்கில் ஈடுபடுத்தியதாக வாதி போலீசார் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், மேற்படி தனது வாகனத்தை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு வாதி காவல் நிலையத்தில் திறந்தவெளியில் நின்று வருவதால் மேற்படி வாகனத்தின் இஞ்சின் பழுதடைந்து அதன் உதிரி பாகங்கள்

இயக்க முடியாது, மழை மற்றும் வெயில் போன்ற இயற்கை காரணங்களால் துருப்பிடித்து வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டு தனக்கு பேரிழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது என்றும், மேலும் வாகனத்தை தென்காசி RDO அலுவலகத்தில் RC புத்தகத்தை பெயர் மாற்றம் செய்யும் வகைக்காகவும், தனது இருசக்கர வாகனத்தை தன் வசம் தற்காலிகமாக ஒப்படைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், இல்லாது போனால் தனக்கு பொருள் நஷ்டமும், பண கஷ்டமும் ஏற்படும் சூழ்நிலை உள்ளது என்றும், மேற்படி இருசக்கர வாகனம் தனக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும் என்றும், மேற்படி வாகனம் கந்தசாமி என்பவர் பெயரில் உள்ளது என்றும், மேற்படி வாகனத்தை மாதத் தவணைக்கு ஆலங்குளத்தில் இயங்கி வரும் Y.D டு வீலர் தனியார் பைனான்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் வாங்கி அனுபவித்து வருகிறேன் என்றும், மேற்படி வாகனத்தின் பெயர் இன்னும் மாற்றப்படாமல் உள்ளது என்றும், அதனை நிரூபிக்கும் பொருட்டு மேற்படி வாகனத்தின் ஆவண நகல்களை இத்துடன் ஆஜர் செய்துள்ளேன் என்றும், மேற்படி வாகனத்தின் அசல் R.C புத்தகம் மேற்படி பைனான்ஸ் நிறுவனம் வசம் உள்ளது என்றும், மேற்படி தனது வாகனத்தின் தற்கால மதிப்பு சுமார் ரூ.50,000/−ஆகும் என்றும், மேற்படி வாகனத்தினை தன்னிடம் இடைக்காலமாக தர உத்தரவிடும் பட்சத்தில் தகுந்த ஜாமின் கொடுக்கவும், நீதிமன்றம் வேண்டும் போது விசாரணையின் போது ஆஜர் செய்யவும் தயாராக உள்ளேன் என்றும், மேற்படி வாகனத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, அல்லது உறுமாற்றங்கள் செய்யவோ மாட்டேன் என்றும், மேற்படி வாகனத்தை தற்காலிகமாக தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம் </u>−**

அரசு தரப்பில், வழக்கானது புலன் விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை E−filing செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனம் (Two wheeler) அரசுக்கு பறிமுதல் செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரருக்கு கொடுத்தால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்றும், எனவே சொத்தினை பிணையில் கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. தீர்வு** –

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, இந்த வழக்கானது NDPS சட்டத்தின் பிரிவுகள் 29(1), 8(C), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி TN 69 BR 1872 என்ற பதிவெண் கொண்ட YAMAHA MT15 இருசக்கர வாகனம் பி.ஆர்.எண்.146/2026 என நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது. மேலும், முதல் தகவல் அறிக்கையில் TN 69 BR 1872 என்ற பதிவெண் கொண்ட YAMAHA MT15 பைக்கினை ஓட்டி வந்த எட்வினின் பைக் டேங்க் கவரை சோதனை செய்தபோது அதில் சுமார் 110 கிராம் எடை கொண்ட நெடிய வாடையுடன் கூடிய போதை பொருளான கஞ்சா இருந்தது என்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், அரசு தரப்பில், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனம் (Two wheeler) அரசுக்கு பறிமுதல் செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரருக்கு கொடுத்தால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்றும், எனவே எதிரியிடம் வாகனத்தை ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்வதென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 16 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.17 11:19:39 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.